Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 26-11-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

## Sell Maize upon Harvest

International Grains Council, United States of America predicted that World maize production in the year 2013-14 would be 948 million tonnes which is 10 per cent higher comparing that in 2012-13. Expanding global feed use, world consumption of maize is expected to show 6 per cent growth, and trade is also forecasted to increase by 6 per cent. In the United States as the harvest of maize started with good production as more than expected, global maize prices started declining.

According to Fourth Advance Estimates of Government of India, the production of maize in 2012-13 is 222.3 lakh tonnes which is 2.8 per cent higher than in 2011-12 at national level. Higher than normal rains across major maize growing States like Andhra Pradesh, Karnataka, Maharashtra and Madhya Pradesh are likely to push up *rabi* acreage and the rabi maize production. If price dips towards on peak arrivals or US prices move upwards then only there exists competitive advantage for Indian maize exporters.

Minimum Support Price of maize for 2013 is fixed at Rs.1310 per quintal which is 11 per cent higher than in the previous season. The farm gate price crossed Rs.1500 per quintal during July – September, 2013 in Tamil Nadu. Currently maize price is sliding down in Tamil Nadu as kharif arrivals from Andhra Pradesh and Karnataka is flowing into the market. In Tamil Nadu, maize harvest would start by November end.

Under the above circumstances, DEMIC of CARDS in TNAU analyzed the past 19 years prices that prevailed in Udumalpet maize market and conducted traders survey. The econometric analysis revealed that the price will rule around Rs.1350-1450 per quintal in the harvesting period ie., during November- December, 2013. Increased global production, increasing demand for maize by the end users will support the price not to decline. Expected increased rabi arrivals from other major producers will support the price to rule in the above range. There are limited chances for the prices to increase. Hence, farmers are advised to sell the harvested maize immediately.

**For further details contact:**

Domestic and Export Market Intelligence Cell
Centre for Agricultural and Rural Development Studies
Tamil Nadu Agricultural University
Coimbatore-641 003,
Phone: 0422-2431405

**For Technical Details please contact:**

The Professor & Head
Department of Millets,
Tamil Nadu Agricultural University
Coimbatore-641 003,
Phone: 0422-2450507

Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-11-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனடியாக விற்பனை செய்யவும்

அமெரிக்காவில் இயங்கும் சர்வதேச தானியக் கழகம் 2013-14 ஆம் ஆண்டில் உலக மக்காச்சோள உற்பத்தி 948 மில்லியன் டன்களாக இருக்குமென்று கணித்துள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 10 சதவீதம் கூடுதலாகும். பெருகி வரும் தீவனத் தேவையினால் உலக மக்காச்சோள உற்பத்தியும், வர்த்தகமும் 6 சதவீதம் அதிகரிக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக மக்காச்சோள உற்பத்தியினால் சர்வதேச மக்காச்சோள விலை குறையத் துவங்கியுள்ளது.

இந்திய அரசின் 4 வது முன்னறிவிப்பு அறிக்கையின் படி, 2012-13 ஆம் ஆண்டில் இந்தியாவில் 222.3 இலட்சம் டன்கள் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக்காட்டிலும் 2.8 சதவீதம் கூடுதலாகும். தற்போது பெய்துள்ள சராசரிக்கும் கூடுதலான மழையினால் முக்கிய மக்காச்சோளம் விளையும் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களில் ரபி பருவ மக்காச்சோள பயிரிடும் பரப்பு அதிகரித்து ரபி பருவ உற்பத்தியும் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் விலை குறைவு அல்லது அமெரிக்காவில் மக்காச்சோள விலை உயர்ந்தால் மட்டுமே இந்திய மக்காச்சோள ஏற்றுமதி சாதகமாக அமையும். 2013ஆம் ஆண்டிற்கான மக்காச் சோளத்தின் குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.1310 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 11 சதவீதம் கூடுதலாகும். தமிழ்நாட்டில் இந்த ஆண்டு ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் மக்காச்சோள விலை குவிண்டாலுக்கு ரூ.1500 ஐத் தாண்டியுள்ளது. தற்போது ஆந்திரப் பிரதேசம் மற்றும்

கர்நாடகாவிலிருந்து வரத்துகள் ஆரம்பித்து உள்ளன. கரீப் பருவ மக்காச்சோள வரத்தினால் தமிழகத்தில் மக்காச்சோள விலை குறையத் துவங்கியுள்ளது. தமிழ்நாட்டில் நவம்பர் மாத இறுதியில் மக்காச்சோள அறுவடை துவங்கும்.

இச்சூழலில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் உடுமலை சந்தையில் கடந்த 19 ஆண்டுகள் நிலவிய மக்காச்சோள விலையை ஆய்வு செய்தது. மேலும் வர்த்தகர்களிடமும் ஆய்வு நடத்தியது. ஆய்வு முடிவுகள் அறுவடை சமயமான நவம்பர் மற்றும் டிசம்பர் 2013ல் மக்காச்சோள விலை குவிண்டாலுக்கு ரூ.1300-1450 வரை இருக்குமென்று கணித்துள்ளது. பெருகிவரும் மக்காச்சோளத் தேவையினால் உற்பத்தி அதிகரித்த போதும் விலை குறைவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. மக்காச்சோளம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகப்படியான ரபிப் பருவ வரத்தினால் விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனடியாக விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள :-</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண்: 0422-2450507

மக்கள் தொடர்பு அலுவலர்